HYUNDAI

Date: August 04,2025

To,

National Stock Exchange of India Limited
Exchange Plaza, C-1, Block G
Bandra Kurla Complex
Bandra (E), Mumbai – 400 051

BSE Limited
Phiroze Jeejeebhoy Towers
Dalal Street, Mumbai – 400 001

SYMBOL: HYUNDAI

SCRIP CODE: 544274

Dear Sir/Ma'am

Sub: Newspaper Advertisement in connection with the 29th Annual General Meeting ('AGM') of Hyundai Motor India Limited ('the Company')

Pursuant to Regulation 30 and 47 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 ("SEBI LODR"), we are enclosing herewith copies of the newspaper advertisement published in today's newspapers, viz., The Financial Express (English edition) and Dinamalar (Tamil edition) for giving Public Notice to the Members intimating that the 29th AGM of the Company will be held on Thursday, August 28, 2025 at 2:00 p.m. (IST) through Video Conferencing.

The above information is also available on the Company's website at https://www.hyundai.com/in/en/investor-relations/investor-information/disclosure/newspaper-advertisement

Kindly take this on record

Thanking you,
For **Hyundai Motor India Limited**

PRADEEP CHUGH
Digitally signed by PRADEEP CHUGH
Date: 2025.08.04 16:25:17 +05'30'

Pradeep Chugh
Company Secretary &
Compliance Officer

Encl: As above

Aadhaar complies with data privacy law: UIDAI chief

OJASVI GUPTA
New Delhi, August 3

ONCE THE DIGITAL Personal Data Protection (DPDP) Act becomes operational, Aadhaar would be fully within its boundaries in protecting consumer data and its usage, Bhuvnesh Kumar, CEO of the Unique Identification Authority of India (UIDAI), told *FE* in an interaction. He said that in some areas, Aadhaar even goes beyond what the DPDP Act requires. "Aadhaar cannot be stored or retained without explicit permission. If it is shared, that too requires consent, and purpose limitations apply," Kumar said. "We are more than compliant. Aadhaar would operate within the scope of DPDP," he added.

Kumar said that Aadhaar imposes tighter controls on how data is stored and shared, compared to many other systems. For instance, the Aadhaar Act allows the use of collected data only for authentication or for purposes that have been specifically notified by the government. On concerns about the possibility of data being re-used for profiling or surveillance, Kumar said the system prevents this through design. "Transaction logs are stored for just six months and then deleted. Nobody would even know for what purpose the data was used beyond that window". He pointed out that the automation of Aadhaar's processes act as a core safeguard. "Everything flows through secure channels, gets authenticated, and goes back to the channel. It's completely automated," Kumar said.

Earlier this year, the government permitted private entities to use Aadhaar authentication under strict conditions tied to the DPDP framework. Kumar said this move is supported by adequate safeguards and governed by specific use cases. He added that UIDAI is working closely with the ministry of electronics and IT, which has asked the agency to examine the final DPDP rules and close any gap.

On the question of deleting core data, Kumar said that biometric and demographic data such as fingerprints, iris scans, and facial records are retained to avoid duplication. "This is intended to prevent duplication and strengthen the system's integrity," he said. Kumar reiterated that Aadhaar is not mandatory in most contexts. "No service mandates Aadhaar. It has substitutes. You don't need it mandatorily to vote or buy a SIM card," he added.

BHUVNESH KUMAR, CEO, UIDAI

No service mandates Aadhaar. It has substitutes. You don't need it mandatorily to vote or buy a SIM card

Semiconductor market likely to grow over twofold by 2030



INDIA'S SEMICONDUCTOR MARKET is expected to more than double to the range of \$100-110 billion by 2030, an official statement said on Sunday citing industry estimates.

The Indian semiconductor market was about \$45-50 billion in 2024-2025 against \$38 billion in 2023, the statement said.

The statement highlighting the need for semiconductors, efforts of the government and response from the industry cited the crisis faced by various technology segments especially by the automobile industry due to dependency on select geographies during the Covid pandemic and stressed the need for developing India as trusted partner in the global supply chain.

"Currently, countries like Taiwan, South Korea, Japan, China and the US dominate the semiconductor industry. Taiwan produces more than 60% of the world's semiconductors, including nearly 90% of the most advanced ones. "Such dependence on a single region has exposed global supply chains to significant risks — from pandemics and natural disasters to geopolitical tensions. Recognising this challenge, many countries are now building secure and diversified supply chains," the statement said.

The US, European Union, Japan, and South Korea have launched national strategies to support domestic chip manufacturing and reduce over-reliance on a single region. "India is emerging as an important and trusted partner in this global shift," the statement said. The global semiconductor market is expected to reach \$1 trillion by 2030, with India's market occupying a substantial portion of it. —PTI

Samsung optimistic about India growth path

PRESS TRUST OF INDIA
New Delhi, August 3

CONSUMER ELECTRONICS MAJOR Samsung sees India as a key strategic market with immense potential, and remains optimistic about its growth trajectory, driven by government initiatives like Make in India, Digital India, and a robust digital ecosystem, a top company official said. The comment comes against the backdrop of global trade and tariff turmoil, and the latest 25% tariff imposed on India by the US.

India is not just a strategic market for Samsung but a key pillar in its global future, said JB Park, president and CEO, Samsung Southwest Asia, adding the South Korean company will continue to invest in innovation, manufacturing, and local value addition, aligning with India's vision of a self-reliant economy. Samsung's long-term commitment to India remains unwavering, as it sees the country as a cornerstone of its global strategy, he said.

For the company, which reported revenue of over ₹1 lakh crore in FY24 from the Indian market and operates here with two manufacturing plants, three R&D centres, and one design centre, India plays a crucial role, catering to both local demand and global markets.

Samsung, which recently introduced the seventh edition of its flagship foldable smartphone Galaxy Z series, plans to manufacture them in India. "These new phones will be manufactured at our Noida factory," Park said.

AI cancels flight from Singapore after tech glitch

AIR INDIA ON SUNDAY cancelled its flight from Singapore to Chennai due to a technical issue. The flight AI349 was to be operated with an Airbus A321.

In a statement, the airline said the flight had been cancelled due to a maintenance task identified prior to departure which required additional time for rectification. "Arrangements are being made to fly the passengers to Chennai at the earliest. Hotel accommodation is being provided, and full refunds on cancellation, or complimentary rescheduling is also being offered to passengers based on their preference," Air India said.

In recent days, some of the Air India planes have faced technical snags. —PTI

சிவகாசியில் ஜோஸ் ஆலுக்காஸின் புதிய ஜுவல்லரி ஷோரூம் திறப்பு

■ சிவகாசியில் ஜோஸ் ஆலுக்காஸ் புதிய ஷோரூமை (வலமிருந்து) எம்.எல்.ஏ., அசோகன், நடிகை ஐஸ்வர்யா லட்சுமி, மேயர் சங்கீதா இன்பம் திறந்து வைத்தனர். (இடமிருந்து 2வது) துணைமேயர் விக்னேஷ் பிரியா.

சிவகாசி, ஆக.4–
தென்னிந்தியாவில் புகழ் பெற்ற ஜுவல்லரி பிராண்ட்களில் ஒன்றான ஜோஸ் ஆலுக்காஸின் சிவகாசி புதிய ஜுவல்லரி ஷோரூம் திறப்பு விழா நடந்தது.

அசோகன் எம்.எல்.ஏ., திறந்து வைத்தார். மேயர் சங்கீதா, துணை மேயர் விக்னேஷ் பிரியா குத்து விளக்கு ஏற்றினர்.

நடிகை ஐஸ்வர்யா லட்சுமி சிறப்பு விருந்தினராக பங்கேற்று புதிய நகைகளின் கலெக்ஷன்களை பார்வையிட்டார். நிர்வாக இயக்குனர்கள் வர்கீஸ் ஆலுக்காஸ், பால் ஜே ஆலுக்காஸ், ஜான் ஆலுக்காஸ் பங்கேற்றனர்.

ஜுவல்லரி நிர்வாக இயக்குனர்கள் கூறியதாவது:

ரூ.75 ஆயிரம் மதிப்பிலான தங்க நகைகள் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு ஒரு இலவச தங்க நாணயம் வழங்கப்படும். வைர நகைகளுக்கு 25 சதவீதம் வரை தள்ளுபடியும், பிளாட்டினம் நகைகளுக்கான சேதார கட்டணத்தில் 15 சதவீதம் தள்ளுபடியும் அளிக்கப்படும். வெள்ளி நகைகளுக்கு சேதார கட்டணம் இல்லை.

வாடிக்கையாளர்கள் அனுபவத்தை மேம்படுத்தும் விதம் பழைய தங்க நகைகளுக்கு பதிலாக எச்.யு.ஐ.டி., ஹால்மார்க் நகைகளை எளிதாக மாற்றிக் கொள்ளும் வசதி வழங்கப்படுகிறது.

இது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த மதிப்பையும், நம்பிக்கையையும் உறுதி செய்கிறது. இந்த திறப்பு விழாவை இன்னும் சிறப்பாக்கும் வகையில் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அவர்கள் வாங்கும் பொருட்களுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன என்றனர்.

வெள்ளம் இழுத்துச்சென்ற இருவரை தேடும் பணி தீவிரம்

போடி, ஆக.4–
கேரளாவில் பெய்த கன மழையால் குரங்கணி பகுதியில் ஏற்பட்ட காட்டாற்று வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்ட இருவரை தீயணைப்பு படையினர் தேடி வருகின்றனர்.

போடி பெரிய பள்ளி வாசல் தெருவைச் சேர்ந்தவர் ஜஹாங்கீர் 47. மதுரை வாகைகுளம் பகுதியைச் சேர்ந்தவர் மஜீத் 52. இவர்கள் உட்பட ஏழு பேர் குடும்பத்தினருடன் நேற்று குரங்கணி மேல் பகுதி நரிப்பட்டி சொக்கன் கேணி அருகே குளித்துக் கொண்டிருந்தனர்.

கேரளாவில் பெய்த கன மழையால் குரங்கணி பகுதியில் திடீரென காட்டாற்று வெள்ளம் வந்துள்ளது.

இதில் ஆற்றை கடக்க முடியாமல் ஏழு பேரும் தவித்துள்ளனர். இந்நிலையில் வெள்ள நீரை கடக்க முயன்ற ஜஹாங்கீர், மஜீத்தை வெள்ள நீர் இழுத்துச் சென்றது.

தகவல் அறிந்த போடி தீயணைப்புத்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று ஆற்றை கடக்க முடியாமல் தவித்த ஐந்து பேரை மீட்டனர்.

இழுத்துச் செல்லப்பட்ட ஜஹாங்கீர், மஜீத் நிலை தெரியவில்லை. அவர்களை தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

'பை பை ஸ்டாலின்': சொல்கிறார் பழனிசாமி

பழனிசாமி

சென்னை, ஆக. 4–
'என் எழுச்சி பயணம் தொடரும். பெயிலியர் மாடல் ஸ்டாலின் அரசை வீழ்த்துவோம்; பை பை ஸ்டாலின்' என, அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை:

'மக்களைக் காப்போம்; தமிழகத்தை மீட்போம்' என்ற உயரிய லட்சியத்துடன், கோவையில் ஜூலை 7ம் தேதி, எழுச்சி பயணத்தை துவக்கினேன்.

பயணம் வாயிலாக, இதுவரை 25 லட்சம் மக்களை சந்திக்கும் வாய்ப்பை பெற்றேன். எழுச்சி பயணத்திற்கு செல்லும் இடமெல்லாம், மக்கள் அளித்து வரும் பேராதரவிலும், அவர்களின் அளவற்ற அன்பிலும், மிகுந்த மகிழ்ச்சியுற்றேன்.

எனக்கு அளித்த வரவேற்புக்கு, தி.மு.க., ஆட்சியை அகற்றிவிட்டு, தமிழக மக்களாகிய உங்களுக்கு நல்லாட்சியை வழங்குவதே, நான் தெரிவிக்கும் நன்றிக்கு நிகரானது. அதுவே என் கடமையும்; தமிழக மக்களின் விருப்பமும். கடன் வாங்குவதில், இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக்கியதுதான், இந்த 'பெயிலர் மாடல்' ஸ்டாலின் அரசின் சாதனை.

மக்களின் தேவைகளை ஒவ்வொன்றாக பார்த்து, பார்த்து செய்யும், அ.தி.மு.க.,வின் நல்லாட்சி அமையும். தமிழக மக்கள் ஏற்றம் பெறுவர். அவர்கள் வாழ்வு உயரும். அதுவரை நான் ஓயப்போவதில்லை. பெயிலியர் மாடல் ஸ்டாலின் அரசை வீழ்த்துவோம்; மக்களைக் காப்போம். தமிழகத்தை மீட்போம்; 'பை பை' ஸ்டாலின்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை படையினரால் விரட்டியடிப்பு ராமேஸ்வரம் மீனவர்களுக்கு நஷ்டம்

ராமேஸ்வரம், ஆக.4–
நடுக்கடலில் மீன்பிடித்த ராமேஸ்வரம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் விரட்டியடித்ததால், மீனவர்கள் நஷ்டத்துடன் கரை திரும்பினர்.

ஆக., 2ல் ராமேஸ்வரத்தில் இருந்து 260 விசைப்படகில் மீனவர்கள் மீன்பிடிக்க சென்றனர். இவர்கள் இந்திய, இலங்கை எல்லையில் மீன்பிடித்த போது அங்கு ரோந்து வந்த இலங்கை கடற்படை வீரர்கள் துப்பாக்கியை காட்டி எச்சரித்து மீனவர்களை மீன்பிடிக்க விடாமல் விரட்டினர். இதனால் அச்சமடைந்த மீனவர்கள் கடலில் வீசிய வலையை அவசரமாக படகில் இழுத்து வைத்து கொண்டு படகுடன் திரும்பினர்.

பின் ராமேஸ்வரம் கடல் பகுதியில் மீன்பிடித்தனர். இதில் மீனவர்களுக்கு எதிர்பார்த்த மீன்வரத்து சிக்கவில்லை. இதனால் 100க்கும் மேற்பட்ட படகில் தொழில் நஷ்டம் ஏற்பட்டு நேற்று காலை ராமேஸ்வரம் கரைக்கு திரும்பியுள்ளனர்.

வரி செலுத்துவது கட்டாயம்

பெண்ணுக்கு தொல்லை மாணவர் கைது

புதுக்கோட்டை, ஆக.4–
அறந்தாங்கி அருகே இளம்பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த கல்லூரி மாணவர் கைது செய்யப்பட்டார்.

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகே தாந்தாணி பகுதியில் வசித்து வரும், 27 வயது பெண், நேற்று தன் வீட்டிற்கு அருகே உள்ள மேய்ச்சல் நிலத்தில், மேய்ந்து கொண்டிருந்த பசுமாட்டை வீட்டிற்கு அழைத்து வந்துள்ளார். வழியில், அதே பகுதி முத்துக்குமார், 19, என்ற கல்லூரி மாணவர், பெண்ணை வழிமறித்து பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றுள்ளார்.

பெண் கூச்சலிடவே, முத்துக்குமார் தப்பியோடி விட்டார். அந்த பெண், குடும்பத்தினரிடம் தெரிவித்தார். அவர்கள் அறந்தாங்கி போலீசில் புகார் அளித்தனர். போலீசார் முத்துக்குமாரை கைது செய்தனர். பாதிக்கப்பட்ட இளம்பெண், அறந்தாங்கி மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார்.

விதவிதமான உணவு வகைகளுடன் பழனிசாமிக்கு பா.ஜ., விருந்து

திருநெல்வேலி, ஆக.4–
திருநெல்வேலியில் அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி உள்ளிட்ட கட்சியினருக்கு, பா.ஜ., தமிழக தலைவர் நயினார் நாகேந்திரன், 110 உணவு வகைகளுடன் சைவ விருந்து அளித்தார்.

'மக்களை காப்போம்; தமிழகத்தை மீட்போம்' என்ற சுற்றுப்பயணத்தை அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி மேற்கொண்டு வருகிறார்.

திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் தொகுதியில் நேற்று முன்தினம் பயணத்தை மேற்கொண்டவர், இரவு திருநெல்வேலியில் உள்ள ஒரு ஹோட்டலில் தங்கினார்.

நேற்று காலை கட்சியினரை சந்தித்தவர், ஓய்வுக்குப் பின், இரவு 8:00 மணிக்கு திருநெல்வேலி பெருமாள்புரத்தில் உள்ள தமிழக பா.ஜ., தலைவர் நாகேந்திரன் வீட்டில் நடந்த விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இதில், அ.தி.மு.க.,வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.,க்கள் மற்றும் பா.ஜ., தலைவர்கள் பங்கேற்றனர்.

விருந்தில், நான்கு வகை சூப், அல்வா உட்பட 11 வகை இனிப்புகள், குஜராத்தி டோக்லா, பஞ்சாபி ஆலு பரோட்டா, டில்லி சோலே பட்டூர், போளி, சொதி என தமிழகத்தின் பாரம்பரிய உணவுகள், தோசை வகைகள், 16 வகை ஐஸ் கிரீம்கள் என மொத்தம் 110 வகை உணவுகள் பரிமாறப்பட்டன.

இந்த விருந்து நிகழ்ச்சிக்குப் பின், அ.தி.மு.க., – பா.ஜ., தொண்டர்களிடையே பிணைப்பு ஏற்படும் என இரு கட்சித் தலைவர்களும் நம்புகின்றனர்.

சினிமாவில் குதித்தார் பா.ஜ., மூத்த தலைவர்

■ பா.ஜ., மூத்த தலைவர் எச்.ராஜா நடிக்கும் 'கந்தன்மலை'படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர்.

சென்னை, ஆக.4–
பா.ஜ., மூத்த தலைவர் எச்.ராஜா, 'கந்தன்மலை' என்ற திரைப்படத்தில், நடிக்க உள்ளார்.

பா.ஜ., மூத்த தலைவராக உள்ள எச்.ராஜா, ஆடிட்டர் தொழில் செய்து வருகிறார். இவர், 'கந்தன் மலை' என்ற திரைப்படத்தில், முக்கிய கதாப்பாத்திரத்தில் நடிக்க உள்ளார். இந்த படத்தை, வீரமுருகன் என்பவர் இயக்க உள்ளார். சிவபிரபாகரன் மற்றும் சந்திரமோகன் இணைந்து, இப்படத்தை தயாரிக்க உள்ளனர். இந்த படத்தின் 'பர்ஸ்ட் லுக் போஸ்டர்' நேற்று வெளியிடப்பட்டது.

அதில், பெரிய முறுக்கு மீசையுடன், கழுத்தில் ருத்ராட்ச மாலையுடன், எச்.ராஜா இருப்பது போன்ற படம் வெளியாகி உள்ளது.

தூத்துக்குடி ஏர்போர்ட் செயல்பட துவங்கியது

தூத்துக்குடி, ஆக.4–
பிரதமர் மோடி ஜூலை 26ம் தேதி திறந்து வைத்த தூத்துக்குடி விமான நிலைய புதிய முனையம் நேற்று முதல் செயல்பட துவங்கியது.

தூத்துக்குடி விமான நிலையத்தில், 886 ஏக்கர் பரப்பளவில், 452 கோடி ரூபாய் மதிப்பில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள உலக தரத்திலான விமான நிலைய முனையத்தை ஜூலை 26ம் தேதி பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

தொடர்ந்து, ஆடிப்பெருக்கை முன்னிட்டு, புதிய விமான நிலைய முனையம் நேற்று முதல் செயல்பட துவங்கியது. மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வகையில் புதிய விமான நிலையத்தில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

சென்னையில் இருந்து வந்து இறங்கிய பயணிகளுக்கு ரோஜா மலர் கொடுத்தும், இனிப்புகள் வழங்கியும் விமான நிலைய இயக்குனர் காட்வின் வரவேற்றார்.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு: வாசன்

அவனியாபுரம், ஆக.4–
''தமிழகத்தில் தொடர்ந்து கொலை, கொள்ளை நடப்பதால் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து இருக்கிறது என்பதில் மாற்றுக்கருத்து இல்லை,'' என, மதுரையில் த.மா.கா., தலைவர் வாசன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: தமிழகத்தில் தொடர்ந்து 2 மாதங்களுக்குள் திருப்புவனம் கோயில் காவலாளி அஜித்குமார், திருநெல்வேலி கவின் ஆணவக்கொலை போன்றவை நடந்து மக்களுக்கு கொடுத்துள்ளது.

இப்பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து இருக்கிறது என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

தொடர்ந்து கொலை, கொள்ளை, திருட்டு, பாலியல் வன்கொடுமை நடக்கிறது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாததாக அரசு செயல்படுவது, அதன் செயலற்ற திறனை எடுத்துக்காட்டுகிறது. போதை பொருட்கள் விற்பதை நிறுத்தும் சக்தி இந்த அரசுக்கு இல்லை. சட்டம் ஒழுங்கு சீர் கெட்டதற்கு டாஸ்மாக் ஆதிக்கமும் காரணம்.

டாஸ்மாக் கடைகளை படிப்படியாக மூடும் நிலையை இந்த அரசு எடுக்க வேண்டும். மக்கள் பிரச்னைகளை பேசுவதற்காக தமிழகத்தில் இருந்து அனைத்து உறுப்பினர்களையும் ஆளுங்கட்சிக்கு மக்கள் கொடுத்தனர். ஆனால் உறுப்பினர்களின் செயல்பாட்டில் மக்கள் ஏமாற்றமடைந்து இருக்கின்றனர்.

லோக்சபா குறித்து கவலைப்படாத உறுப்பினர்கள், அதனை நடத்த விடாமல் முடக்குவது ஏற்புடையது அல்ல. பீகாரிலும், தமிழகத்திலும் வாக்காளர்கள் பிரச்னையை கிளப்ப நினைப்பது சரியானது அல்ல. மக்கள் அதை ஏற்க தயாராக இல்லை என்றார்.

காவிரியில் மோட்ச தீபம்

ப.வேலூர், ஆக.4–
ஆடிப்பெருக்கையொட்டி நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் காவிரி ஆற்றில் மோட்ச தீபம் விடும் நிகழ்வு நேற்று நடந்தது. இதன்படி மாலை 6:00 மணிக்கு மோட்ச தீபம் ஏற்றி பரிசலில் கொண்டு சென்று நடு ஆற்றில் விடப்பட்டது. ஏராளமானோர் பாலத்திலிருந்து இந்நிகழ்வை கண்டு களித்தனர். காவிரி ஆற்றில் நடப்பாண்டு பரிசல் போட்டி நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. பாதுகாப்பு காரணங்களால் போட்டிக்கு தடை விதிக்கப்பட்டது.